பள்ளிக் கல்வி இயக்குநர் நடுநிலைப் பள்ளிகளிலுள்ள எட்டாம் வகுப்பை நீக்கி உயர்நிலைப் பள்ளியில் வைக்க வேண்டும் என்று நடவடிக்கை எடுத்து வருவதால் நடுநிலைப் பள்ளிகளிலும் உயர் நிலைப்பள்ளிகளிலும் எட்டாம் எட்டாம் வகுப்பு சொல்லித்தரும் இடைநிலை ஆசிரியர்கள் பாதிக்கப்படுவது குறித்து.

1981 மார்ச் 5] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : விளக்கம்தான் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கருத்தைப்பற்றி விவாதம் நடந்திருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதைப்பற்றி இந்த மேலவையிலேயே விவாதம் நடந்திருக்கிறது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசியபொழுது கல்வித் தரத்தின் அடிப்படையில் எட்டாம் வகுப்பிற்கு உயர்ந்த கல்வித் தகுதி பெற்ற ஆசிரியர்கள் இருக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இது குறித்து ஒட்டியும், வெட்டியும் இங்கே பேசப்பட்டுள்ளது. கல்வியின் தரம் உயர்வது என்ற கண்ணோட்டத்தின் அடிப்படையில் சொன்னால், அதை எதிர்த்து யாரும் கருத்து சொல்ல மாட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் சொன்னதுபோல, எட்டாவது வகுப்பில் ஏழை மாணவர்கள அங்கங்கேயே படிக்கின்ற அளவுக்கு எட்டாம் வகுப்பு எங்கிருந்தாலும் உயர்கல்வி தகுதி படைத்த ஆசிரியர்களை நியமிக்கலாம். இந்தக் கருத்தை அரசு ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்தக் கருத்தும் பேசப்பட்டிருக்கிறது. உயர் தொடக்கப் பள்ளியிலே பட்டதாரி ஆசிரியர்களைப் போடுவது பற்றிப் பேசப்படவில்லை. அந்த அடிப்படையிலே பேசப்பட வேண்டும். அந்த மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள் மூலம், தகுதி பெற்றவர்கள் மூலம் கல்வி தர வேண்டும். அந்த அடிப்படையிலேதான் இதை நாம் அணுக வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். கருத்துக்களை எப்போதும் சொல்லலாம். எல்லாவற்றையும் பார்த்துத்தான் எந்த முடிவையும் நாம் எடுக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(2) வட ஆற்காடு மாவட்டம் வேலூரில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நகர மக்கள் படும் அவதிகள் குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் வேலூரில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நகர மக்கள் படும் அவதிகள் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையில் இந்த மாவட்டத் தலைநகரமான வேலூரினுடைய மொத்தத் தேவை 24 லட்சம் கேலன் குடிநீர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சுமார் 16.35 லட்சம் கேலன் குடிநீர்தான் இப்போது மக்களுக்குக் கிடைக்கக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. கோடைக்காலமானால், இன்னும் பாதிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வேலூருக்குக் குடிநீர் தட்டுப்பாடு என்பது ஒவ்வொரு ஆண்டும் கவலை தரக்கூடிய ஒரு பிரச்சினையாக இருந்துகொண்டிருக்கிறது. இத்தகைய சூழ்நிலையில் எவ்வாறு சென்னை குடிநீர்ப் பிரச்சினை தீர ஒரு நிரந்தரமான திட்டத்தைச் செயல் படுத்த இருக்கிறோமோ அது போல் ஒரு பெரிய திட்டத்தை, வேலூருக்குள்ள குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க ஒரு நல்ல நிரந்தரமான திட்டம் தீட்டி ஒரு நிலையான பரிகாரம் காணுவது குறித்து அரசு பரிசீலிக்குமா? அதற்கான நடவடிக்கைகளை எடுக்குமா?

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது 129.27 ரூபாயில் ஒரு திட்டம் தீட்டப்பட்டு அந்தத் திட்டத்தின்கீழ் வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. அந்தத் திட்டத்தின் வேலை முடிந்துவிட்டால், ஒரு நாளைக்கு 8.35 எம்எல்டி. தண்ணீர் கிடைப்பது என்று இருப்பது, 11.35 எம்எல்டி. அளவுக்கு அதிகமாகக் கிடைக்கும். இந்தப் பணி மார்ச் 31 தேதியில் முடிந்துவிடும் என்று எதிர் பார்த்தோம். இனியும் காலந்தாழ்த்தாது விரைவிலே செய்து முடிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அதைச் செய்து முடித்துவிட்டால், மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கவலைப்படத் தேவையிருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அமைச்சரவர்கள் அளித்த விவரங்களுக்காக என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அறிக்கையிலே தற்கால நடவடிக்கைகளாகச் சில குறிப்புகள் காணப்படுகின்றன. இந்த நேரத்தில் ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்பு

@ 96-97 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

கிறேன். மக்களுக்குக் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படும்போது, குறிப்பிட்ட இந்த நேரத்தில் தண்ணீர் கொடுக்கப்படும், அதற்காக இந்த முறையைப் பின் பற்றுகிறோமென்று மக்களுக்குத் தெளிவாக அறிவிக்க வேண்டும். தண்ணீர் கொடுப்பதில் இன்னின்ன கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன என்று முன்கூட்டி அறிவித்துவிட்டால், அவர்கள் முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை களை எடுத்துக்கொள்ள வழிவகை ஏற்படும். சென்னையிலே அப்படிப்பட்ட நடவடிக்கை முன்பு எடுக்கப்பட்டது. இந்த நேரத்தில் கிடைக்கும், இந்த நேரத்தில் கிடைக்காது, மாற்று ஏற்பாடுகள் என்ன என்பது தெளிவாக அறி விக்கப்பட வேண்டும். மக்கள் அதற்கேற்றவாறு தங்கள் தேவைகளைச் சரி செய்துகொள்ளக்கூடிய நிலைமைகள் உண்டாகும். எனவே வேலூரில் இப்படிப் பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இது குறித்து நகராட்சியின் விசேட அதிகாரிக்குத் தகவல் தந்து, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்தை மனதில் வைத்துச் செயல்பட ஆணையிடுகிறோம்.

6. அரசின் தீர்மானம்.

தமிழ் நாட்டில் பருவ மழை தவறியதன் காரணமாக ஏற்பட்டுள்ள வறட்சி நிலை குறித்த அறிக்கைமீதான விவாதம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"மேலவையில் 2—3—1981 ஆம் தேதியன்று வைக்கப்பட்ட தமிழ் நாட்டில் பருவமழை தவறியதன் காரணமாக ஏற்பட்டுள்ள வறட்சி நிலை குறித்த @ அறிக்கை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"மேலவையில் 2—3—1981 ஆம் தேதியன்று வைக்கப்பட்ட தமிழ் நாட்டில் பருவமழை தவறியதன் காரணமாக ஏற்பட்டுள்ள வறட்சி நிலை குறித்த அறிக்கை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

மாண்புமிகு உறுப்பினர்கள் 12 பேர்கள் இது குறித்துப் பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆசிரியர் தொகுதி, நியமனத் தொகுதி உறுப்பினர்கள் நான்கு பேர்கள் இது குறித்துப் பேசுவதற்கு அக்கறை காட்டி

@ 98-112 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சடிக்கப்பட்டுள்ளது.